நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாண சபை
වාරිමාර්ග දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත් සභාව
**Department of Irrigation, Northern Provincial Council**

புதிய கொலனி வீதி
ஏ9 வீதி, மாங்குளம்

පුදිය කොලනි පාර
ඒ9 පාර, මාංකුලම්

Puthiya Kolani Road,
A9 Road, Mankulam

எனது இல: / මගේ අංකය / My NO: NP/27/02/001

உமது இல: / ඔබේ අංකය / Your NO:

திகதி / දිනය / Date: 2025-11-28

**நீர்ப்பாசனத் திணைக்களம் - வடக்கு மாகாணம்**
**28.11.2025 – 09.00am**

1. **நீர்த்தேக்கங்களின் தற்போதைய நிலை**
வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தின் ஆளுகையின் கீழுள்ள 54 பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன திட்டங்களில் காலை 9.00 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்பின் படி
    - வான் பாயும் நிலையிலுள்ள குளங்கள் : 36
    - கொள்ளளவு 75% - 100% இலுள்ள குளங்கள் : 02
    - கொள்ளளவு 50% - 74% இலுள்ள குளங்கள் : 06
    - கொள்ளளவு 25% - 49% இலுள்ள குளங்கள் : 07
    - கொள்ளளவு 25% இலும் குறைந்த குளங்கள் : 01

2. **முக்கிய நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம்**
    - இரணைமடு குளம் : 27’-10” (58%)
    - வவுனிக்குளம் : 27’-00” (100%) – 1’ - Spilling
    - முத்துஐயன்கட்டுக்குளம் : 23’-00” (92%) – கதவுகள் திறக்கப்பட்டுள்ளன

    இரணைமடு குளமானது தற்போது 26’-10” எனும் நீர் மட்டத்தை அடைந்துள்ளபோதும் அதன் நீரேந்து பரப்பிற்குள் வர இருக்கும் மழை அடுத்த மணித்தியாலத்திற்குள் இதன் நீர் மட்டத்தை 43’01” க்கு கொண்டுசெல்லும். இது குளத்திற்கு அபாயத்தை ஏற்படுத்தும். எனவே இரணைமடு குளத்தின்கீழ் பகுதியின் வெள்ள அனர்த்தத்தை தவிர்ப்பதற்காக 8 வான் கதவுகள் இன்று காலை 6.00 மணிக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதனூடாக தற்போது 1’-4” உயரமான தண்ணீர் மணித்தியாலத்திற்கு 0.153 மில்லியன் கன மீற்றர் பாய்ச்சல் வேகத்தில் சென்று கொண்டுப்பதுடன் நீர் மட்டம் கூடும் போது பாய்ச்சல் வேகம் மேலும் அதிகரிக்கும்.

    தற்போது உள்வரும் பாய்ச்சல் வீதம் மணித்தியாலத்திற்கு 6.281 மில்லியன் கன மீற்றர் ஆக காணப்படுவதால் நீர்மட்டமானது 28’-6”(கதவின் கீழ் மட்டம்) இனை அடையும் போது ஏனைய 6 கதவுகளும் உயர்த்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனினும் குளத்தின் கீழ்ப்பகுதி வெள்ள அனர்த்தத்தை தடுப்பதற்காக வெளிச்செல்லும் நீரின் வேகமானது மணித்தியாலத்திற்கு 0.9 -1.0 மில்லியன் கன மீற்றருக்கு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் உள்வர இருக்கும் நீரின் அளவிற்கேற்ப இது அதிகரிக்கப்படலாம்.

3. **மழைவீழ்ச்சி தொடர்பான தற்போதைய நிலை** (வடக்கு மாகாண நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படும் மழைவீழ்ச்சி அவதானிப்பு நிலையங்களின் படி)
அவதானிப்பு கால எல்லை – 26.11.2025 (மு.ப. 7.00) – 28.11.2025 (முப. 9.00)
    - அதிக மழைவீழ்ச்சி பதிவான நிலையங்கள்

| நிலையம் | மழைவீழ்ச்சி (26.11.2025 மு.ப 07.00 – 27.11.2025 மு.ப 07.00) | மழைவீழ்ச்சி (27.11.2025 மு.ப 07.00 – 28.11.2025 மு.ப 09.00) |
|---|---|---|
| வவுனியா | 165mm | 340mm |
| சேமமடு | 151mm | 135mm |
| மாங்குளம் | 36mm | 378.5mm |
| முத்துஐயன்கட்டு | 71mm | 342mm |

Director - 021-2285446
AO - 021-2285445
E – mail : irrigationnp@yahoo.com
Deputy Director - 021-2285652
Fax - 021-2285440

நீர்ப்பாசனத் திணைக்களம், வடக்கு மாகாண சபை
වාරිමාර්ග දෙපාර්තමේන්තුව, උතුරු පළාත් සභාව
**Department of Irrigation, Northern Provincial Council**

புதிய கொலனி வீதி
ஏ9 வீதி, மாங்குளம்

පුදිය කොලනි පාර
ඒ9 පාර, මාංකුළම්

Puthiya Kolani Road,
A9 Road, Mankulam

எனது இல: / මගේ අංකය / My NO: NP/27/02/001
உமது இல: / ඔබේ අංකය / Your NO:
திகதி / දිනය / Date: 2025-11-28

- குறைந்தளவு மழைவீழ்ச்சி பதிவான நிலையங்கள்


| நிலையம் | மழைவீழ்ச்சி (26.11.2025 மு.ப 07.00 – 27.11.2025 (மு.ப 07.00) | மழைவீழ்ச்சி (27.11.2025 மு.ப 07.00 – 28.11.2025 (மு.ப 09.00) |
|---|---|---|
| தொண்டைமானாறு | 0.0mm | 12mm |
| யாழ்ப்பாணம் | 1 mm | 32.5mm |
| கரியாலை நாகபடுவான் | 3.3mm | 47.2mm |

மேலும், அதிகமான மழைவீழ்ச்சியின் காரணமாக, வவுனியா மாவட்டத்திலுள்ள பம்பைமடு நீர்த்தேக்கத்தின் உயர் வெள்ள மட்டமானது(அதிகூடிய வான் பாயும் அளவு) 16" ஆக காணப்பட்ட போதும் தற்போதைய அதிகூடிய மழைவீழ்ச்சியினால் 34" வான் பாய்வதனால் வான் வழிவாய்க்காலுக்கான தடுப்பணையின் ஒரு பகுதி வெட்டப்பட்டு குளம் உடைப்பெடுப்பதற்கான ஆபத்தை குறைப்பதற்கான நடவடிக்கை நேற்று மேற்கொள்ளப்பட்டது.

மேலும், கனகராயன்குளமும் அதேபோல் உடைப்பெடுக்கும் ஆபத்தில் காணப்படுவதால் அதன் வால்கட்டுபகுதியினை வெட்டிவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது, அதேபோல் வவுனியா மாவட்டத்திலுள்ள அலியாமருதமடு குளமும் உடைப்பெடுக்கும் ஆபத்தில் காணப்படுவதால் அதையும் வெட்டி விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும், தண்ணிமுறிப்பு, மடவாளசிங்கம், மருதமடு குளம், கனுக்கேணி குளங்களிற்கு எமது அலுவலர்கள் சென்றுள்ள போதிலும் கையடக்க தொலைபேசிக்கான வலையமைப்பில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக அவர்களுடன் தொடர்பு ஏற்படுத்தமுடியால் உள்ளது.

மேலும் நீர்ப்பாசனத்திட்டங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக தொடர்ந்து எமது திணைக்கள பொறியியளர்கள், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அலுவலர்கள் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.



தேறாங்கண்டல் - வான் பாய்கின்றது

**எந்திரி. த.இராஜகோபு,**
மாகாண நீர்ப்பாசனப் பணிப்பாளர்,
நீர்ப்பாசனத் திணைக்களம்,
வடக்கு மாகாணம்.

Eng.T.Rajagobu
Provincial Director of Irrigation
Department of Irrigation
Northern province